# இராமாவதாரமும் இராமர் வழிபாடும்

# Ramavatharamum Ramar Vazhipadam

**இரா. நிதா**
*முனைவர் பட்டஆய்வாளர்*
*ஆய்வுமையம்*
*இலக்குமிபுரம் கலைமற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யுர்*

**முனைவ கு.ச.ஜெயஸ்ரீ**
*முதுகலைத் தமிழ்துறைத் தலைவர்*
*தமிழாய்வுமையம்*
*இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யுர் & மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்*
*திருநெல்வேலி*

***R. Nitha***
*Ph.D. Research Scholar*
*Lekshmipuram College of Arts and Science*
*Neyyoor*

***Dr. K.S. Jeyashree***
*Head, Department of Tamil*
*Research Department of Tamil*
*Lekshmipuram College of Arts and Science*
*Neyyoor*
*Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**ஆய்வுச் சுருக்கம்**

*அதர்மத்தை அழித்து தர்மம் தழைக்க திருமால் எடுத்த அவதாரங்கள் ஒன்பதும் போற்றத்தக்க ஒரு நற்காரியத் திற்காகவே எடுக்கப்பட்டதாகும் இவற்றுள் தூய நற்குணம் நிரம்பிய மக்கள் பண்பினை குறிக்கத் தோற்றம் பெற்றதே இராமாவதாரம். இராமாவதாரத்தில் இராமன் கடவுளாகவே போற்றி வணங்கப்படுகிறான். அவதாரபுருஷனான இராமனுக்கு பல்வேறு இடங்களில் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. அவ்வகையில் இராமாவதாரமும் இராமர் வழிபாடும் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.*

**Abstract**

*All the nine avatars taken by Tirumal to destroy adharma and make dharma flourish are taken for an admirable good cause. Of these, The Ramavataram appears to represent the character of the people who are full of pure goodness. In Ramaavatharam, Rama is worshipped as a god. Temples have been erected at various places for Lord Rama, the incarnation of Lord Rama. In this way, this article deals with the worship of Rama and Rama avatharam.*

***முக்கியச் சொற்கள்:***

*இராமர், அதர்மம், அவதாரங்கள், அவதாரபுருஷனன்*

***Keywords:***

*Ramar, Adharma, Avatars, Ramaavatharam*

**Citation**

Nisha, R. and KS. Jeyashree. “Ramavatharamum Ramar Vazhipadam.” *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 2, 2022, pp. 35–40.

*https://doi.org/10.5281/zenodo.20136065*

**அவதாரம்**

*புவுலகில் எப்பொழுது தர்மம் தலை சாய்ந்து அதர்மம் வேருன்றப்படுகிறதோ அப்பொழுது பகவான் தர்மத்தை நிலைநாட்ட புவுலகில் அவதாரம் எடுகின்றார். அவதாரம் என்ற சொல்லுக்கு ஏதேனும் ஓர் உருவத்தில் தெய்வம் எடுக்கும் பிறப்பு என்று தற்கால தமிழ் அகராதி விளக்கம் அளிக்கின்றது. அவதாரம் என்ற சொல்லுக்கு ஏதேனும் ஓர் உருவத்தில் தெய்வம் எடுக்கும் பிறப்பு என்று தற்கால தமிழ் அகராதி விளக்கம் அளிக்கின்றது. பகவானின் பத்து அவதாரத்தை திருமங்கை ஆழ்வார்*

***மீனொடு ஆமை கேழல்அரி***
***குறளாய் முன்னும் இராமனாய்த்***
***தாமோதரனாய்க்கற்கியும்***
***ஆனான் தன்னைக் கண்ணபுரத்து***
***அடியன் கலியன் ஒலிசெய்த***
***தேனார் இன்சொல் தமிழ்மாலை***
***செப்பப் பாவம் நில்லாவே.***

*என்று ஒரே பாடலில் விவரித்துப்பாடியுள்ளார்.*

**இராமவதாரம்**

*திருமாலின்மானுட அவதாரமே இராமாவதாரமாகும். அறத்தை வளர்பதற்கும், மனிதனிடம் மறைந்து கிடக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதற்கும் ஸ்ரீமன் நாராயணன் இராமானாக அவதாரம் செய்தார். மச்சஅவதாரம், கூர்மஅவதாரம், வராக அவதாரம், வாமன அவதாரம், பரசு ராம் அவதாரம், இராம அவதாரம், பலராமன் அவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம் என்ற திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றாக இராம அவதாரம் கருதப்படுகிறது. தர்மம் ஏக்காலத்திலும் பின்பற்ற வேண்டும் என்பதனை உலகிற்கு உணர்த்துவதற்காகவே பகவான் இராமாவதாரம் எடுத்துள்ளார். அதாவது இராவணன் என்ற அரக்கனை வதம் செய்து அறம் வளர்க்க எடுத்த அவதாரம் இராமாவதாரமாகும்.*

*இராம அவதாரம் திருமால் அவதாரங்களில் சிறப்புக்குரியது*

***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்***
***தெய்வத்துள் வைக்கப் படும்***

*என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப திருமால் அவதாரங்களில் இராமன் மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழ்ந்து இறைநிலையை அடைகிறான். இராமன் ஸ்ரீமன் நாராயணனின் அவதாரம் என்று உணர்த்தாமல் ஒரு சாதாரண மனிதன் தான் என்பது போல் வாழ்ந்து காட்டியவர்.*

*மனித தர்மத்தைக் கடைபிடித்து சம்சாரசாகரத்தில் உழன்று, துக்கத்தில் அல்லல்பட்டு இன்னல்களை அனுபவித்து மானிடப்பிறவிக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்கிறார் ஸ்ரீராமன்.*

**இராமாவதாரத்தின் சிறப்பு**

*தர்மம் எக்காலத்திலும் பின்பற்றப்பட வேண்டும் என்பதை உலகிற்கு உணர்த்துவதற்காகவே பகவான் இராமவதாரம் எடுத்துள்ளார். கம்பன் தனது இராமவதார கதையில் சுந்தரகாண்டம், பிணிவீட்டுப்படலத்தில் இந்திரஜித் விடுத்த பிரம்மாஸ்திரத்திற்கு கட்டுப்பட்ட அனுமன் இராவணனுடைய சபையில் கொண்டுபோய் நிறுத்தப்பட்டபோது தான்*

*யாரென்று கூறும்போது*

***அறம் தலைநிறுத்தி வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்***
***திறம் தெரிந்து உலகம் புணச்செந்நெறி செலுத்தி தீயோர்***
***இறந்து உக நூறித்தக்கோர்இடர் துடைத்து ஏக, ஈண்டு***
***பிறந்தனன், தன் பொன் பாதம் ஏத்துவார' பிறப்பு அறுப்பான்***
***( கம்பராமாயணம் - 5885 )***

*என்று இராமபிரானின் அவதாரச் சிறப்பை எடுத்துக்காட்டித்தான் இராமபிரானின் தூதன் என்று குறிப்பிடுகிறான். அனுமனின் வாய்மொழியாக இராமபிரானுடைய அவதாரச் சிறப்பை சித்தரிப்பதாக அமைந்துள்ளது இந்தக் கம்பராமாயணப் பாடல்.*

*இராமன் அரக்கரை வெல்ல போர் பற்றிய செய்திகளை வானார வீரர்களோடு ஆராய்ந்த பொழுது பறவைகள் ஒலியெழுப்புகின்றன. அவ்வொலி பேச்சுக்கு இடையுறாக இருகின்றது எனவே இராமன் பறவைகளின் ஒலியை, கேட்காமல் செய்தான். பல விழுதுகளை உடைய ஆலமரத்தில் இருந்த பறவைகள் ஒலி எழுப்பவில்லை எனவே ஆலமரம் ஒலியின்றி அமைதியாக இருந்தது என்பதை ,*

***வேன்வேற் கவுரியர் தோல் முதுகோடி***
***முழங்கு இரும் பௌவம் இறங்கும் முன்துறை***
***வெல்வோர் இராமன் அருமறைக்கு அவித்த***
***பால் வீழ் ஆலம் போல***
***ஒலி அவிந்தன்று இவ்வாழுங்கல் ஊரே (அகம்70 13-17 )***

*என்று குறிப்பிடுகிறது. இந்த அகநானுற்றுப் பாடல் வழி இராமாவதாரத்தின் சிறப்புகளை அறிய முடிகின்றது.*

**இராமனின் தனித்துவம்**

*இராமனின் வாழ்வு ஒரு பாத்திரப்பரிமாணம் மட்டுமே. இராமன் தன் எல்லையை மீற முடியாதவன். அதனால் தன் வாழ்க்கையே தியாகம் செய்கிறான் எல்லா நிறைவுக்குணங்களும் நிறைந்தவன் இராமன். தனக்கு கிடைக்க வேண்டிய பதவியைச் சிற்றன்னையின் சூழ்ச்சியால் தம்பிக்கு கொடுத்தவன். அந்நிலையிலும் முகத்தில் ஏதொரு சலனமும் இல்லாமல்*

*"**அன்றலர்ந்த தாமரைபோல**" காணப்பட்டான். யாருக்கும் சொல்லாலும் மனதாலும் எத்தகையத் தீங்கும் நினையாதவன். தர்ம தேவதையின் அவதாரமே இராமன். வாழ்க்கையின் உயர்ந்த பண்புகளை ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு பாத்திரமாக அவனே வாழ்ந்து காட்டுகிறான். அதனாலேயே தன் வாழ்கையில் எந்த நிலையில் உள்ளவர்களுக்கும் இராமன் அவதாரம் பொருந்துகிறது. இதுவே இராமனின் தனித்துவம்*

**இராமர் வழிப்பாட்டின் தோற்றம்**

*கி.பி4 - ஆம் நூன்றாண்டில் குப்தர்கள் காலத்திலும் அதற்குச் சிறிது முன்னும் பின்னும் இதிகாசங்களும், புராணங்களும் விரிவாக்கப்பட்டன. அப்பொழுது அவதாரக்கதைகள் புதியவனாகச் சேரக்கப்பட்டன. இம்மாற்றங்களுக்குப் பின்னர் பொது மக்கள் இராமாயண வரலாற்றை விரும்பி கேட்கலாயினர். அவதார புருஷனாக விளங்கிய இராமபிரானுக்கு தனிக்கோயில்கள் அமைத்து மூலவராக இராமரை வைத்து வழிப்படும் வழக்கம் தஞ்சை*

*நாயக்க மன்னர் காலத்தில் பிரபலமான பழக்கமாகும். தஞ்சையை ஆண்ட நாயக்கர் மன்னர்களின் காலத்தில் அமைச்சராக இருந்தவர் கோவிந்த தீட்சிதர். அவரே தென்னாட்டில் இராமர் திருக்கோயில்கள் அமைய பெரிதும் வழிச் செய்தவராகக் கருதப்படுகிறார்*

**தமிழகத்தில் இராமர் வழிபாடு**

*தமிழகம் ஆன்மீக ஞானத்திலும், தவ ஒழுக்கத்திலும், நல்ல பண்பாட்டிலும் தலை சிறந்து விளங்குகிறது. தெய்வங்கள் மானிட உருவில் அவதாரங்கள் எடுத்து மனிதர்களை நல்வழிப்படுத்திய நிகழ்வுகள் பலவும் நடைபெற்றுள்ளன. குறிப்பாக அவதார புருஷனாகக் கருதப்பட்ட இராமன் கி.பி 4 - ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தெய்வமாக வழிப்படப்பட்டான். வட மாநிலங்களில் சிறப்புப் பெற்றிருந்த வழிபாடுதமிழகத்திலும் பரவத் தொடங்கியது. இதன் விளைவாக தமிழகத்திலும் இராமத் திருக்கோயில்கள் பல தோற்றம் பெற்றன.*

**சப்தராம திருத்தலங்கள்**

*இராமர் மூலவராக எழுந்தருளும் திருத்தலங்கள் ஏழு சப்தராம திருத்தலங்கள் என்று இன்றளவும் அழைக்கப்படுகின்றன. அவை*

1. *அயோத்தி*
2. *திருபுல்லாணி*
3. *ஸ்ரீ ராமவிண்ணகரம்*
4. *திருவெள்ளியங்குடி*
5. *திருஏவ்வுள்*
6. *திருப்புள்ள புதங்குடி*
7. *திருப்புட்குழி என்பனவாகும்.*

**இராமர் வழிபாடு**

*தமிழகதில் இராமர் வழிபாடு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பொதுவாக ஒரு கோயில் எந்த மூர்த்திக்கு உரியதோ அந்த மூர்த்தியை கருவறையில் பிரதிஷ்டை செய்வது வழக்கம். ஆனால் இராமர் திருகோயில்களில் இராமன் பெரும்பாலும் சீதாதேவி, இலட்சுமணன்மற்றும் ஆஞ்ச நேயருடனே காட்சி தருகிறார்.*

*இராமர் திருகோயில்களில் தினமும் காலை, மாலை இருவேளையும் புஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சனிகிழமைகளில் சிறப்பு புஜைகள் நடைபெறுகின்றன. வாரந்தோறும் பஜனை நிகழ்ச்சிகளும் தவறாமல் நடைபெற்று வருகின்றன.*

*இராமர் திருக்கோயில்களில் ஸ்ரீ ராமநவமி, பஜனை பட்டாபிஷேகம், அனுமன் ஜெயந்தி போன்றவை பெரும் திருவிழாவாகக் கொண்டாடப்பாட்டு வருகின்றன. இராமனின் பிறந்த நாளே ஸ்ரீ ராமநவமித் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. இராமனின் பட்டாபிஷேகப் படத்தை வைத்து புஜை செய்தால் குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும், வெற்றிகள் தேடி வரும் என்பது நம்பிக்கை. ஆகவே பட்டாபிஷேகம் இராமர் திருகோயில்களில் பெரும் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.*

**முடிவுரை**

*இராமன் திருப்பாதங்கள் பட்ட புண்ணிய தலங்கள் இந்தியா முழுவதும் வரலாற்றுச் சின்ங்களாகவிரவிக்கிடக்கின்றன. அவ்வகையில் இராமவதாரமும் இராமர் வழிபாடும் என்ற இந்தக் கட்டுரையில் இராமனின் சிறப்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

**பார்வை நூல்கள்**

1. *ஸ்ரீதசாவதார வைபவம்*
2. *நாகர்கோயில் கிருஷ்ணன்*
3. *காப்பியங்களில் கம்பன் முதல் கண்ணதாசன் வரை*
4. *க. கண்ணகி*
5. *கம்பராமாயணம் பன்முகப் பார்வை*
6. *தா. நீலகண்ட பிள்ளை*

## References

1. Nagerkoil Krishnan, Srithasavathara Vaibavam.
2. Kannagi, K., Kappiyangalil Kamban muthal Kannathasan Varai.
3. Neelakanda Pillai, T., Kambaramanayam Panmuga Paarvai.